# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2007 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2007 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, மே மாதம் 11 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச. வ.—ஓ. கூட் 15/2004

### ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத் தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் கண்டியில் தாபிக்கப்பட் டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றி கரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட் களும் "றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்சி அபிவிருத்தி மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது, அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்

றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும், அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) வறிய பௌத்த மாணவரின் தர்க்கரீதியானதும் சமய ரீதியானதுமான கல்வியறிவை மேம்படுத்துவதற்கும் அவர்களின் பலதரப்பட்ட திறமைகளை விருத்தி செய்வதற்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஆ) பௌத்தர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கலில் உதவுதல், சமய பாடசாலைகளைக் கொண்டுநடாத்துதல், நூல்நிலையங்கள், பௌத்த தகவல்கள் மற்றும் ஆராய்ச்சிக்கான நிலையங்களைப் பராமரித்தலும் இலத்திரனியல் நிலையங்களைப் பராமரித்தலும் ;

(இ) பௌத்த மக்களின் உடல் மற்றும் மனநிலையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கேதுவாக பொருளாதார நிவாரண சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) கைவிடப்பட்டோருக்கு நிவாரண சேவைகளை வழங்குதலும் முதியோர் இல்லங்கள் மற்றும் ஓய்வறைகளைப் பராமரித்தலும் ;

(உ) தொழிலற்ற பௌத்தர்களுக்காக வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வேலைத்திட்டங்களை ஆரம்பித்தலும் அந்நோக்கத்துக்காக உதவி வசதிகள் மற்றும் ஏனைய கடன் வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) தொழில் பெறுதலை இலகுபடுத்தும் வகையில் தொழில் பயிற்சிநெறிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்தல் ;

(எ) கைத்தொழில்களுக்கு உதவி வழங்குதலும், பாரம்பரிய மத, வழிபாட்டுத் தலங்களைத் தரிசிப்பதற்காக அப் பகுதியூடாக பயணம் செய்கின்ற பௌத்த யாத்திரியர்களின் வசதிக்காக யாத்திரர் தங்குமிடத்தை பராமரித்தல் ; அத்துடன்

(ஏ) மேலே பந்திகளில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள் களின் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் விரும்பத் தக்கது எனக் கூட்டுத்தாபனம் கருதுகின்ற புத்தகங்கள், ஆய்வுச் சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், செய்திப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும்.

கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமை, கட்டுப்பாடு மற்றும் நிருவாகம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைவாக, அத்த கைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்க தெரிவுசெய் யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் உள்ளடக்கும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆளும் பேரவையொன்றுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப் பினும், மன்றத்தின் தாபகத் தலைவரான றம்புக்வெல்ல விபஸ்சி தேரர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தவிசாளராதல் வேண்டும்.

(3) வண. றம்புக்வெல்ல விபஸ்சி தேரருக்குப் பின்னர், தவிசாளர் பதவி வெற்றிடமாகுமிடத்து, உறுப்பாண்மைச் சபை யின் இரண்டாம் உறுப்பினர் தவிசாளர் பதவியை வகித்தல் வேண்டும் என்பதுடன் றம்புக்வெல்ல பிக்கு சந்ததியினரின் அடுத்த பிரதம மாணவர், உறுப்பாண்மைச் சபையின் இரண்டாம் உறுப்பினராதலும் வேண்டும்.

(4) பிக்கு அந்தஸ்தைத் துறக்கின்ற பிக்கு உறுப்பினர், உறுப் பாண்மையை இழத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப் பாண்மை, றம்புக்வெல்ல பிக்கு சந்தியினரின் அடுத்த மாண வருக்குச் செல்லுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5.** (1) ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை அனுமதித்தலும் வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களை மீளப் பெறுதலும் வெளியேற்றுதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்களின் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(இ) ஆளும் சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதன் தத்துவங்கள், கடமைகள் பணிகளும், மற்றும் ஆளும் சபை உறுப்பினர்களின் பதவிக் காலங்களும் ;

(ஈ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை அத்தகைய கூட்டங்கள் நடாத்தப்படவேண்டிய நேரங்கள், இடங்கள் அவை பற்றிய அறிவித்தல் அவற்றின் நிகழ்ச்சிநிரல் மற்றும் அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எல்லா வேளைகளிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**6.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியாண்டு, ஒவ்வொரு வருடத்தின் சனவரி 1 ஆம் தேதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் தேதி வரைக்குமாக இருத்தலும் வேண்டும்.

(2) கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். அத்துடன் பேரவை அவ்வாறு தீர்மானிக்குமிடத்து, பணமானது சேமிப்பு அல்லது நடைமுறைக்கணக்கில் வைப்பிலிடப்படலாம்.

*மன்றத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

**7.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கணக்குகளை கணக்காய்வு செய்தல்.*

**8.** (1) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகளும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் பற்றிய செம்மையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகுதிவாய்ந்த இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவரான கணக்காய்வாளர் ஒருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**9.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக்கையளிப்பு அல்லது வேறுவகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**11.** இச்சட்டத்தின் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, பொல்ஹேன்கொடை வீதி, கிருளபனை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்